செ.வெ.எண். 22/ஆகஸ்ட் நாள்: 11.08.2016

# அனைவருக்கும் கல்வி இயக்கம் தருமபுரி மாவட்டம் சார்பில் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.



தருமபுரி மாவட்டம் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் நல்லம்பள்ளி ஒன்றியம், அவ்வை நகர் அரசு உயர்நிலைப்பள்ளியில் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் இன்று (11.08.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாற்றுதிறனுடைய குழந்தைகளுக்கான மருத்துவ முகாமை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

இன்றைய தினம் நல்லம்பள்ளியில் மாற்றுத்திறனுடைய குழந்தைகள் மருத்துவ முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 8 ஊராட்சி ஒன்றியங்களிலும் பள்ளிக் கல்வித்துறை அலுவலர்கள் சார்பில் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் நடைபெறும். இம்முகாம்களில் மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் பிரச்சினைகளை பதிவு செய்து அவர்களின் குறைகளை போக்கும் விதமாக மருத்துவ வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் குறைகளை நிவர்த்தி செய்யும் விதமாக இதுபோன்ற முகாம்கள் நடைபெறுகிறது. மாற்றுத்திறனாளிகள் அவர்களாகவே பல்வேறு அரசு அலுவலகங்களுக்கு செல்வதற்கு ஏதுவாக சாய்தள வசதி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து பள்ளிகளிலும் சாய்தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசின் திட்டங்கள் அனைத்தும் பெற்றிட மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பித்து பயன்பெற வேண்டும்.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடத்திலிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு தேவையான உபகரணங்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் 11.08.2016 முதல் 24.08.2016 வரை 6 முதல் 18 வயது வரை உள்ள அனைத்து மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளும் மருத்துவ முகாம்களில் கை மற்றும் கால் பாதிக்கப்பட்டோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதவர்கள், மூளை முடக்குவாதம், கண்பார்வையற்றோர் மற்றும் பல வகை மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு அவர்களின் தீவிர தன்மையின் அடிப்படையில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு அனைவருக்கும் கல்வி இயக்கம் வாயிலாக இலவசமாக வழங்கப்படும். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த 104 மருத்துவ உதவி சேவை மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. சம்மந்தப்பட்டவர் 104 மருத்துவ உதவி சேவையை அழைக்கும் போது அவர்களிடத்தில் உரிய தகவல்கள் பெற்று பதிவு செய்து அழைப்பாளர்களின் சேவைக்கேற்ப உரிய மருத்துவ ஆலோசனை அலுவலர்கள் மூலம் பெற முடிகிறது. எனவே இம்முகாம்களில் மாற்றுத்திறனுடைய குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கே.பி. மகேஸ்வரி, மாவட்ட கல்வி அலுவலர் (பொ) திரு. பாலாஜி, அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் கூடுதல் அலுவலர் திரு. ஸ்ரீனிவாசன், வட்டார வள மைய மேற்பார்வையாளர் திரு. முருகன், உதவி தொடக்க கல்வி அலுவலர் திரு. சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.